**சிந்திக்கல்லூரி, தமிழ்த்துறை**
**ஆண்டறிக்கை**
**2021-2022**

*சிந்திக்கல்லூரி தமிழ் இலக்கியப்பேரவை சார்பாக 2021- 2022 ஆம் கல்வி ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்வுகள் விவரம் பின்வருமாறு.*

**வெள்ளி நூல்**

*தமிழ்த்துறையில் இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு பயிலும்மாணவர்கள் வெள்ளி தோறும் ஒரு நூல் அறிமுகம் செய்யும் நோக்கில் வெள்ளிநூல்எனும் நிகழ்வு 19.03.2021 அன்று துறைத்தலைவர் வழிகாட்டுதலின்படி தொடங்கப்பட்டது. அன்று முதல் வெள்ளிதோறும் ஒரு நூல் அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது.*

- *இதன் தொடர்ச்சியாக 11.06.2021 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளிநூல் விழா இணையம் வழியாக (https://meet.google.com/ksv-gvog-uch) நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கு தகழி சிவசங்கரப்பிள்ளை அவர்கள் மலையாளத்தில் இயற்றிய செம்மீன் எனும் நாவலை (தமிழாக்கம் சுந்தர ராமசாமி) தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் க.வாணிஜோதி அவர்கள் அறிமுகம் செய்தார்.*

- *இதன் தொடர்ச்சியாக டி.செல்வராஜ் அவர்கள் இயற்றிய தோல் (சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்) நாவலை தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா அவர்கள் 01.10.2021 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார்.*

- *இதன் தொடர்ச்சியாக மாணவர்களுக்கு வளையாபதி காப்பியத்தை செ. குபேந்திரா மூன்றாம் ஆண்டு மாணவியும் குண்டலகேசி காப்பியத்தை பா.ஜனனி இரண்டாம் ஆண்டு மாணவியும் 22.10.21 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு அறிமுகம் செய்தார்கள்.*

**சிறப்புச் சொற்பொழிவு**

*இளங்கலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் இலக்கியப் பேரவை சார்பாக வள்ளலாரின் பிறந்தநாளை முன்னிட்டு "வள்ளலாரின் மகத்துவமும் மருத்துவமும்" எனும் தலைப்பில் தமிழ்த்துறைப் பேராசிரியர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர். முனைவர் வ.ஹரிஹரன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவில் வள்ளலாரின் பிறப்பு, அவர் காலச் சூழ்நிலை, பசிப்பிணி தீர்த்தல், ஜோதி வழிபாடு, வள்ளலாரின் மருத்துவக்குறிப்புகள் போன்ற கருத்துக்களை மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைத்தார். இந்நிகழ்வு நண்பகல் 12 மணியளவில் யூ.டியூப் நேரலையில் (YOUTUBE LIVE) நடைபெற்றது.*

### பன்முக பயிற்சி பட்டறை

*சிந்திக்கல்லூரி, தமிழ்த்துறை சார்பாக இளங்கலைத்தமிழ் பயிலும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து நாட்கள் (23.11.2021 முதல் 27.11.2021 வரை) பன்முகப் பயிற்சிப்பட்டறையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் தமிழ்த்துறைப்பேராசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். தொடக்கவிழாவைத் தொடர்ந்து அமர்வு தொடங்கப்பட்டு ஐந்து நாட்களும் தொடர்ப் பயிற்சி அளித்தனர். விவரம் பின்வருமாறு.*

| வ.எண் | நாள் | தலைப்பு | பேராசிரியர் |
|---|---|---|---|
| *1.* | *23.11.2021* | பேச்சுக்கலை | முனைவர் க.வாணிஜோதி |
| *2.* | *23.11.2021* | எழுத்துக்கலை | முனைவர் கௌ.பெருமாள் |
| *3.* | *24.11.2021* | கவிதைக்கலை | முனைவர் பெ.சுபா |
| *4.* | *24.11.2021* | படைப்பிலக்கியம் | பேரா.ச.கார்த்திக் |
| *5.* | *25.11.2021* | நாட்டுப்புறவியல் | முனைவர் அ.ஜெயபால் |
| *6.* | *25.11.2021* | திரையிசைப்பாடல்கள் | முனைவர் த.கார்த்திகேயன் |
| *7.* | *26.11.2021* | சுவடியியல் | முனைவர் வெ. டில்லிபாபு |
| *8.* | *26.11.2021* | தமிழக வரலாறும் பண்பாடும் | முனைவர் சி.பு.இந்துஜா |
| *9.* | *27.11.2021* | இலக்கணம் | முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா |

*இதனைத்தொடர்ந்து நிறைவுவிழா நடத்தப்பட்டு பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.*

### பாரதி விழா

*பாரதியாரின் 139 வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாகச் சிறப்பு பட்டிமன்றம் 11.12.2021 அன்று நடத்தப்பட்டது. இதன் நிகழ்வாக "இன்றைய சமுதாயம் பாரதி கண்ட புதுமைப் பெண்களால் சீர்ப்படுகிறதா? சீரழிகிறதா?" என்ற தலைப்பில் சிந்திக்கல்லூரி தமிழ்த்துறை சார்பில் சிறப்பு பட்டி மன்றம் நடத்தப்பட்டது. இதன் நடுவராக மக்கள் மொழி நாயகன், நகைச்சுவை அருவி திரு.தமிழ் நெஞ்சன் வழி நடத்தி சென்றார்.*

### பேராசிரியர் செம்மல் விருது

*சென்னை. இராயப்பேட்டை, அனைத்திந்தியத்தமிழ் எழுத்தாளர்கள் சங்கமும் கன்னியாகுமரி,முகிலை கவிஞன் பதிப்பகமும் இணைந்து நடத்தும் முப்பெரும்விழா, 12-12-2021, ஞாயிறுக்கிழமை கன்னியாகுமரி, குமரி அனந்தன் வரலாற்றுக்கூடத்தில் நடைப்பெற்றது. இதில் சென்னை, சிந்திக்கல்லூரி. தமிழ்த்துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் முனைவர் த.பிரகலாதன், முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா, முனைவர் சி.பு. இந்துஜா, முனைவர் க.வாணிஜோதி, முனைவர் பெ.சுபா, முனைவர் அ.ஜெயபால் மற்றும் முனைவர் வெ.டில்லிபாபு ஆகியோர் பேராசிரியர் செம்மல் விருதினைப் பெற்றனர்.*

## நூல் வெளியீடு

*முனைவர் க.வாணிஜோதி அவர்களின்* ***வள்ளலார் வைகுண்டர் படைப்புகளில் சமூகநிலை*** *என்ற நூல் கல்லூரி செயலர் அவர்களால் 17.3.2022 அன்று வெளியிடப்பட்டது.*

## *TNPSC* வெற்றிக்கு வழிகாட்டி – அறிமுகம்

*சிந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையும் "நான் ஓர் ஐ.ஏ.எஸ்"அகாடமியும், இணைந்து 24-12-2021 அன்று வெள்ளி பிறபகல்: 1 மணி அளவில் TNPSC வெற்றிக்கு வழிகாட்டி ஓர் அறிமுக வகுப்பு நடத்தப்பட்டது. இதில் சிந்திக்கல்லூரியில் பயிலும் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் பெயர்களைத் தாமாகவே முன்வந்து தங்கள் பெயர்களைப் பதிவுச் செய்து இதில் பயனடைந்தனர். வினாக்கள் கேட்கப்பட்டு, விடையளித்த மாணவர்களுக்கு புத்தகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முதல்வர் (பொறுப்பு) முனைவர் வி.ஹேமலதா அவர்கள் தலைமை உரையாற்றினார் முனைவர். த.பிரகலாதன் தமிழ்த்துறை தலைவர். வரவேற்புரை வழங்கினார். பேரா.தமிழ் இயலன் இயக்குநர், "நான் ஓர் ஐ.ஏ.எஸ்" அகாடமி வாழ்த்துரை வழங்கினார். கவிஞர்.சுபா அருணாசலம் தலைமை மேலாண் அலுவலர் "நான் ஓர் ஐ.ஏ.எஸ்" அகாடமி அவர்கள் அறிமுக உரை ஆற்றினார். திரு.இர.ஆஅஸ்வத்பயிற்றுநர், "நான் ஓர் ஐ.ஏ.எஸ்" அகாடமி மற்றும் செல்வி. செ.ஐஸ்வர்யா பயிற்றுநர், "நான் ஓர் ஐ.ஏ.எஸ்" அகாடமி நோக்க உரை வழங்கினார்.*

## பிற கல்லூரி / நிறுவனங்கள்-நிகழ்வுகள்

- *தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகத் திருவள்ளூர் மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி 31.8.2021 அன்று நடைப்பெற்றது. இதில் பா.ஜனனி இரண்டாமாண்டு தமிழ்த்துறை, மோனிஷா இரண்டாமாண்டு வணிகவியல் மாணவியர் கலந்து கொண்டனர்.*

- *தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் முன்னிட்டு திருவள்ளூர் மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி 2.10.2021 அன்று நடைப்பெற்றது. இதில் இரண்டாம் ஆண்டு பி.காம் ஐ.எஸ்.எம் துறை மாணவியர் எம்.சிவகாமி மற்றும் எச்.செல்சியா கலந்து கொண்டனர்.*

- *தமிழ்நாடு திருவள்ளூர் கழக அறக்கட்டளை நடத்திய சிந்தனைப் பட்டிமன்றத்தில் (12.12.2021) திருவள்ளுவர் வழியில் திருக்குறள் மொழியில் மிகச் சிறந்து விளங்குவது கல்வி செல்வமா? பொருட்செல்வமா? எனும் தலைப்பில், கல்வி செல்வமே என்று பா.ஜனனி இரண்டாமாண்டு தமிழ்ப் பயிலும் மாணவியும் பொருட்செல்வமே எனும் தலைப்பில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் க.வாணிஜோதி அவர்களும் வாதிட்டு கல்லூரிக்குச் சிறப்புச் செய்தனர்.*

- திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி சார்பாகத் தேசிய வாக்காளர் தினப்போட்டிகள் *(24.12.2021)* நடைப்பெற்றது. இதில் சிந்திக்கல்லூரி சார்பாக மாணவர்கள் கலந்துகொண்டனர். ஓவியப்போட்டியில் *V.*சத்யநாராயணன், *J.*மஞ்சு, *K.*சேயோன் இதழ் சற்குணம் *(II B.Sc VISCOM), S.* சிவகாமி*(II B.Sc MATHS), D.*சிவரஞ்சனி, *J.*சரண்யா *(I B.A., TAMIL)* மாணவர்கள் கலந்துகொண்டனர். கட்டுரைப்போட்டியில் *S.* சிவகாமி, *D.*சாலினி, *D.*அதிர்ஷ்டராஜ் *(II B.Sc MATHS), K.*சேயோன் இதழ் சற்குணம் *(II B.Sc VISCOM)* மாணவர்கள் கலந்துகொண்டனர்.

- பாரதியாரின் *139*வது பிறந்த தினம் மற்றும் *75*வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக அரசின் ஆளுநர் மாளிகையில் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கட்டுரைப் போட்டி குறித்து *17.12.2021* அன்று அறிக்கை வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் மின்னஞ்சல் வழியாக மாணவர்களின் (இ.அபிநயா *III B.A. TAMIL, D.*நித்யா ஸ்ரீ *I B.Sc MATHS, D.*ஷாலினி, *D.*அதிஷ்டராஜ் *II B.Sc MATHS)* கட்டுரை அனுப்பப்பட்டது.

- நசரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த போட்டியில் *(29.04.2022)* சிந்திக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். காய்கறி அலங்காரப்போட்டியில் *N.*பாரதி, *D.*துர்காதேவி *(I B.COM CORP)* முதல்பரிசு பெற்றனர். வினாடிவினா போட்டியில் *M.*சிந்து, *R.*பிரியங்கா *(IB.COM CORP)* கலந்துகொண்டு இரண்டாம் பரிசு பெற்றனர். ஓவியப்போட்டியில் *B.*வரதராஜ பெருமாள் *(IB.COM CORP)* முதல் பரிசும் இ.அபிநயா *(III B.A.TAMIL)*மூன்றாம் பரிசும் பெற்றனர்.

- ஆல்பா கலை மற்றும் அறிவியல் கல்லூயில் *06.05.2022* அன்று நடைப்பெற்ற போட்டியில் சிந்திக் கல்லூரி மாணவிகள் அகல்யா அனிதா, கலா, தமிழ்ச்செல்வி கோமதி *(IB.A.TAMIL)*நாடகத்தில் மூன்றாம் பரிசினைப் பெற்றனர்.

# இலக்கிய பேரவை நிகழ்வுகள்

| வ.எண் | போட்டிநாள் | போட்டிகள் | முடிவுகள் |
|---|---|---|---|
| | *04.05.2022* | **கதை சொல்லுதல்** | **முதல் பரிசு :** ர.அகல்யா *(I பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு** : இ. அபிநயா *(III பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு :** செ.குபேந்திரா *(III பி.ஏ., தமிழ்)* |
| *2.* | *04.05.2022* | **கவிதைப்போட்டி** வல்லமைத்தாராயோ | **முதல் பரிசு :** தா.கனிமொழி *(II பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு** : செ.குபேந்திரா *(III பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு :** இ. வைஷ்ணவி *(II பி.ஏ., தமிழ்)* க.துர்கா *(II பி.ஏ., தமிழ்)* |
| *3.* | *05.05.2022* | **வினாடிவினா** | **முதல் பரிசு** : ஆ. தமிழரசன் *(I பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு** : இ. அபிநயா *(III பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு** : ந. பிரியா *(II பி.ஏ., தமிழ்)* |
| *4.* | *09.05.2022* | **கட்டுரைப்போட்டி** உழைப்பே உயர்வு | **முதல் பரிசு** : ம. ஷாலினி *(II பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு** : இ. அபிநயா *(III பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு** : ச. பிரவீனா *(III பி.ஏ., தமிழ்)* |
| *5.* | *16.05.2022* | **பேச்சுப்போட்டி** கற்கை நன்றே கற்கை நன்றே | **முதல் பரிசு :** பி. ஜனனி *(II பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு :** பி. சஞ்ஜெய் *(I பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு :** இ. அபிநயா *(III பி.ஏ., தமிழ்)* |
| *6.* | *17.05.2022* | **நா நெகிழ் பயிற்சி** | **முதல் பரிசு** : பா. சஞ்சய், *(I பி.ஏ., தமிழ்)* **இரண்டாம் பரிசு** : ஆ. தமிழரசன், *(I பி.ஏ., தமிழ்)* **மூன்றாம் பரிசு** : இ. அபிநயா, *(III பி.ஏ., தமிழ்)* |